# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

## திருத்தணி



tnhrce.org

## திருப்புகழ் திருப்படித் திருவிழா (2017 - 2018)

## (31-12-2017 மற்றும் 01-01-2018)

உ

# திருப்புகழ் திருப்படித் திருவிழா
# அழைப்பிதழ்

"குன்று தோறாடல்" என நக்கீரரால் போற்றப்படும்
முருகப்பெருமானின் ஐந்தாம் படை வீடாக திருத்தணி திகழ்கிறது
மலர்களில் சிறந்தது தாமரை, நதிகளில் சிறந்தது கங்கை, ஊர்களில் சிறந்தது காஞ்சி.
அதுபோல் மலைகளில் சிறந்தது திருத்தணிகை என்கிற கந்த புராண பாடல்களில்
இத்தலத்தினை பற்றி புகழ்ந்துள்ளனர்.

"திருப்புகழ் ஓதும் கருத்தினர் சேரும் திருத்தணிகை
தணிகையில் இணையிலி
விண் அமர் கொடுத்திடும் அரிவை குறத்தியோடு
அழகு திருத்தணி மலையில் நடித்தருள் பெருமானே
தணிகை மலைதனில் மயிலின் நிர்த்தத்தில் நிற்கவல பெருமானே"

tnhrce.org

என முருகப் பெருமானைப் போற்றும் அருளாளர் அருணகிரிநாதர்
இத்தலத்தின் மேல் தளம் கொண்ட பக்திப் பெருக்கினால்
64 திருப்புகழ் பாடல்களை பாடி உருகி போற்றியிருத்தலையும் காண்கிறோம்,
இத்திருத்தணிகை மலையில் தான் வள்ளிப் பிராட்டியாரை
கந்தவேல் மணம் முடித்து திருவருள்புரிகிறார்.
முருகப் பெருமான் தன் கிரியா சக்தியாகிய தெய்வானை
மற்றும் இச்சா சக்தியாகிய வள்ளியம்மை ஆகியோருடன்
காட்சியளித்து அருள்பாலிக்கிறார் என்பது இத்தலத்தின் சிறப்பாகும்!
இத்தலத்தில் திருப்புகழ் திருப்படித் திருவிழா
வரும் 31-12-2017 ஞாயிற்றுக்கிழமை மற்றும் 01-01-2018 திங்கட்கிழமை
ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது.
அச்சமயம் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் ஓதும் அடியார்களும்,
பக்த பெருமக்களும் வருகை தந்து மேற்படி திருவிழாவினை சிறப்பித்து
திருத்தணிகை முருகனின் திருவருள் பெற்றுச் செல்கின்றனர். இத்திருவிழாவின்போது
திருக்கோயிலின் அடிவாரத்தில் உள்ள சரவணப் பொய்கையிலிருந்து
மலைக்கோயில் வரை ஒரு வருடத்தினை குறிக்கும் வகையில்
அமைந்துள்ள 365 படிகளுக்கு ஒவ்வொரு படிக்கும் பஜனை குழுவினருடன்
திருப்புகழ் பாடிக்கொண்டு பூசை செய்துகொண்டு மலைக்கோயிலை சென்றடைவர்
இச்சிறப்புமிகு திருவிழாவில் பக்தர்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து
திருவிழாவினை சிறப்பித்து திருத்தணி முருகனின் திருவருள் பெறுமாறு
அன்புடன் அழைக்கிறோம்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் நல்லாசியுடன்

இந்து சமய அறநிலையத்துறைக்கு எண்ணற்ற திட்டங்களை வாரி வழங்கிக்கொண்டிருக்கும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **எடப்பாடி திரு.K.பழனிச்சாமி** அவர்களின் நல்லாட்சியில்

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் **சேவூர் திரு.எஸ்.ராமச்சந்திரன்**

அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெறும்

# திருத்தணிகை
# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
# திருப்புகழ் திருப்படித் திருவிழா

**நிகழ்ச்சிகள் விவரம் :**

## 31.12.2017 ஞாயிற்றுக்கிழமை

**காலை 8.00 மணி**

**திருப்புகழ் திருப்படிப் பூசை துவக்க விழா**

மலையடிவாரம் (சரவணப் பொய்கை அருகில்)

**காலை 11.00 மணி**

**வெள்ளி மயில் வாகனம் திருவீதி உலா**

tnhrce.org

## 01.01.2018 திங்கட்கிழமை

**இரவு 8.00 மணி**

**வெள்ளி நாக வாகனம் திருவீதி உலா**

மேலும் 31.12.2017 காலை முதல் 01.01.2018 காலை வரை
மலைக்கோயில் திருப்புகழ் பஜனை மண்டபத்தில் பல்வேறு குழுவினர்களால்
திருப்புகழ் பாடல்கள் தொடர்ந்து பாடப்படும்.
31.12.2017 காலை 6 மணி முதல் 01.01.2018 இரவு 9 மணி வரை
பக்தர்கள் வசதிக்காக திருக்கோயில் நடை திறந்திருக்கும்.

இவ்விழாவிற்கு வருகை தரும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,
சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள்,
அரசு உயர் அதிகாரிகள் மற்றும் பக்தகோடிகள்
அனைவரையும் அன்புடன்

**வருக! வருக!! வருக!!!**

என வரவேற்கிறோம்.

**செ.சிவாஜி** பி.எஸ்.சி.,பி.எல்.,எம்.ஏ.,எம்.ஏ.,எம்.பி.ஏ.,எம்.பில்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர்

**வே.ஜெயசங்கர்**
தக்கார்

மற்றும் திருக்கோயில் பணியாளர்கள்

உ

பக்தர்களுக்கு அன்பான வேண்டுகோள்

## திருப்பணி

திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில்
9 நிலை கிழக்கு இராஜகோபுரம் 122 அடி உயரத்தில்
ரூ.3.59 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றது.
இத்திருப்பணியில் கலந்துகொண்டு திருத்தணிகை முருகனின்
திருவருள் பெற்று நீடூழி வாழ வேண்டுகிறோம்.

## மாண்புமிகு முதலமைச்சரின் அன்னதான திட்ட அறிவிப்பு

இத்திருக்கோயிலில் பகல் 12.15 மணிக்கு தினமும் 300 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. பக்தர்கள் கலந்துகொண்டு பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது. உயர்வான இத்திட்டத்திற்கு நிதி உதவி செய்ய விரும்பும் பக்தர்கள் தாங்கள் விரும்பும் ஒரு நாளில் 300 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கிட ரூ.7500/- நன்கொடையாக செலுத்தவேண்டும். நிரந்தர முதலீட்டுத் திட்டத்தில் ரூ.1,20,000/- செலுத்தி அதிலிருந்து கிடைக்கும் வட்டியின் மூலமாக ஆண்டு தோறும் தாங்கள் விரும்பும் ஒரு நாளில் 300 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருவருள் பெறலாம். நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு.

## வைர அட்டை வழங்கும் திட்டம்

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மற்றும் இதனுடன் இணைந்த உபகோயிலில் நடைபெற்று வரும் அன்னதான திட்டத்திற்கு குறைந்தபட்சம் ரூ.7 இலட்சம் மற்றும் அதற்கு மேல் நன்கொடை வழங்குபவர்களுக்கு வைர அட்டை வழங்கும் திட்டம் இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நன்கொடையாளர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து திருக்கோயில்களிலும் குடும்பத்துடன் விரும்பும் நாட்களில் இலவசமாக சிறப்பு தரிசனம் செய்ய அனுமதிக்கப்படும்.

## பிளாட்டினம் அட்டை வழங்கும் திட்டம்

இத்திருக்கோயிலுக்கு ரூ.1 கோடி மற்றும் அதற்குமேல் நன்கொடை வழங்குவோர்க்கு பிளாட்டினம் அட்டை வழங்கப்படும். அப்பிளாட்டினம் அட்டை மூலமாக நன்கொடையாளர் குடும்பத்தார் தமிழகத்தின் அனைத்துத் திருக்கோயில்களிலும் 10 நபர்களுக்கு மிகாமல் 20 வருடங்களுக்கு சிறப்பு தரிசனம் செய்ய முன்னுரிமை வழங்கப்படும்.

tnhrce.org

## திருப்படி பூசை கட்டளை திட்ட அறிவிப்பு

திருப்புகழ் திருப்படி திருவிழாவினை முன்னிட்டு பிரதி வருடம் டிசம்பர் 31ம் நாள் 365 படிகளுக்கும் திருப்படி பூசை நடைபெறுகிறது. படி ஒன்றுக்கு பூசை செய்ய நிரந்தர கட்டளையாக ரூ.501/- காணிக்கையாக செலுத்த வேண்டும். சிறப்பு மிக்க படி பூசையில் பக்தர்கள் உறுப்பினர்களாக கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

## இணையதள சேவை அறிவிப்பு

இத்திருக்கோயிலில் பக்தர்களின் வசதியை கருத்தில் கொண்டு தங்குவதற்கு குடில்கள் / அறைகள். அபிடேகங்கள் மற்றும் சிறப்பு தரிசனம் உற்சவங்கள் ஆகியன இணைய தளம் (Online) மூலம் முன்பதிவு செய்துகொள்ளும் வசதிகள் செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது. மற்றும் பக்தர்களின் நலன்கருதி e-Hundial சேவைகள் ATM/Debit Card மூலம் ஏற்றுக்கொள்ளப்படும். திருவாலங்காடு மாந்தீஸ்வரர் பரிகார பூஜை மற்றும் மத்தூர் மகிஷாசூரமர்த்தினி அம்மன் அபிடேக கட்டணங்கள் இணையதளம் மூலம் பதிவு செய்யலாம்.

இணையதள முகவரி : www.tirutanigaimugan.tnhrce.in

---

**நன்கொடையாளர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :**

இணை ஆணையர் / செயல் அலுவலர்

**அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்**

திருத்தணி - 631 209.

044-27885247 (அலுவலகம்) 044-27885243, 044-27885201 (மலைக்கோயில்)